புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்

38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635

T/TN/2026/0316/6130/1505

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.

No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 274 | 09-04-2026 | வியாழன் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி

Volum 01 | Issue: 274 | 09-04-2026 | Thursday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry





# ஊத்தங்கரை தொகுதியில் 'கை' சின்னத்திற்கு வாக்குச் சேகரிப்பு: வேட்பாளர் ஆர். குப்புசாமிக்கு மத்தூரில் உற்சாக வரவேற்பு!

கிருஷ்ணகிரி. ஏப்.9–

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை (தனி) சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் இந்திய தேசிய காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடும் ஆர். குப்புசாமி, மத்தூர் ஒன்றியத்தில் தீவிர தேர்தல் பிரச்சாரத்தை மேற் கொண்டார்.



மத்தூர் மு க கவுண்டனூர். இணைப்புச் சாலையில் இருந்து தனது வாக்குச் சேகரிப்பைத் தொடங்கிய வேட்பாளர், மத்தூர் பேருந்து நிலையம் அருகில் உள்ள தலைவர்களின் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர், அங்கு திரண்டிருந்த பொதுமக்கள் மத்தியில் உரையாற்றிய அவர், 'கை' சின்னத்திற்கு வாக்களித்து தன்னை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் திமுக மத்தூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் குணா வசந்த அரசு, தெற்கு ஒன்றியச் செயலாளர் கே.ஆர்.கே. நரசிம்மன், மத்திய ஒன்றியச் செயலாளர் வி. செந்தில் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும், மாநில, மாவட்ட மற்றும் ஒன்றியக் கழக நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA 2, BDA, BLC), பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் கூட்டணி கட்சிகளின் தோழர்கள், கழகத்தின் மூத்த முன்னோடிகள் என ஏராள மானோர் கலந்து கொண்டு வேட்பாளருக்கு ஆதரவாக வாக்குச் சேகரித்தனர்.




ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு மாவ்டம், ஆப்பக்கூடல் குமரகுரு விவசாய கல்லூரியில் 100 சதவீதம் வாக்குப்பதிவு குறித்து நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கரும்பு கொண்டு தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதை பார்வையிட்டார்.

# திருவள்ளூர் சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி தேர்தல் விழிப்புணர்வு அதிநவீன மின்னனு விளம்பர வாகனம் மாவட்ட தேர்தல் அலுவலர் மு.பிரதாப் துவக்கி வைத்தார்




திருவள்ளூர் ஏப் 09 :

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் செய்தி மக்கள் தொடர்பு துறை இணைந்து "தேர்தல் திருவிழாதமிழ்நாட்டின் பெருவிழா" சட்டமன்ற பொதுத் தேர்தல்2026 யை முன்னிட்டு 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியரு மான மு.பிரதாப் தேர்தல் விழிப்புணர்வு ஒட்டு வில்லைகள் ஒட்டப் பட்ட அதிநவீன மின்னனு விளம்பர வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 யை முன்னிட்டு 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு துறை வாயிலாக இதுவரை ரூ.5000க்கும் மேற்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாவட்டம் முழுவதும் 10 சட்டமன்ற தொகுதிகளிலும் நடப்பட்டது. இதன் தொடர்ச்சியாக திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் செய்தி மக்கள் தொடர்பு துறை இணைந்து அதிநவீன மின்னனு விளம்பர வாகனத்தில் பொது மக்கள் விழிப்புணர்வு அடையும் வகையில் வாக்குப்பதிவை வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு ஒட்டு வில்லைகள் ஒட்டப் பட்டு அதில் தேர்தல் விழிப்புணர்வு குறும்படங்கள் திரையிட 10 சட்டமன்ற தொகுதி களுக்கும் மாவட்ட தேர்தல் அலு வலர் கொடியசைத்து துவக்கி வைத்து விழிப் புணர்வு ஏற்படுத்தினார்.

இதில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரும் இணை இயக்குநருமான வை.ஜெயக்குமார், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அஸ்வின்குமார், உதவி இயக்குநர் (பயிற்சி) பி.மோகன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழக தலைமைச் செயலர் முருகானந்தம் அதிரடி மாற்றம்

சென்னை: ஏப்.9–

தமிழக தலைமைச் செயலர் முருகானந்தம் அதிரடியாக மாற்றப்பட்டார். அதேபோல், லஞ்ச ஒழிப்புத் துறை டிஜிபியும் மாற்றப்பட்டார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 23 ம் தேதி நடைபெறுகிறது. இந்நிலையில், தமிழக தலைமைச் செயலர் மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறை டிஜிபியை மாற்றி தேர்தல் ஆணையம் அதிரடி நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.



புதிய தலைமைச் செயலராக சாய்குமார் ஐஏஎஸ் நியமிக்கப்பட் டுள்ளார். இவர் தமிழ்நாடு செய்திக் காகித நிறுவனத் தலைவராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல், இவர் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமியின் தனிச் செயலாளராகவும் இருந்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.

தமிழக தலைமைச் செயலர் தவிர ஆயுதப்படை, லஞ்ச ஒழிப்புத் துறை டிஜிபியும் மாற்றப்பட்டுள்ளார். புதிய டிஜிபியாக சந்தீப் மிட்டலை நியமனம் செய்து இந்திய தலைமைத் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், இந்த உத்தரவை உடனடியாக அமல்படுத்தி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பணியில் இணைந்தது தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேர்தலுக்கு முன்னர் அதிகாரிகள் மாற்றம் என்பது வழக்கமாக நடைபெறுவதுதான் என்றாலும்கூட, தேர்தலுக்கு 2 வாரங்களே உள்ள நிலையில், தமிழக தலைமைச் செயலரையே அதிரடியாக மாற்றி உத்தரவிட்டுள்ளது கவனம் பெற்றுள்ளது.

# பி.என். ரோட்டில் மேம்பாலம் அ.தி.மு.கவேட்பாளர் உறுதி!!






பெருமா நல்லூர்,ஏப்.09

திருப்பூர் வடக்கு தொகுதி அ.தி.மு.க. தேர்தல் தலைமை அலுவலகம், ஈட்டிவீரம்பாளை யம் ஊராட்சி பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. அதன் திறப்பு விழா நடைபெற்றது.

அலுவலகத்தை திறந்து வைத்து வேட்பாளர் ஆனந்தன் பேசியதாவது:

அ.தி.மு.க. ஆட்சி காலத்தில்தான் திருப்பூர் மாவட்டம் பல்வேறு வளர்ச்சிகளை பெற்று உள்ளது. எம்.எல்.ஏ. விஜயகுமார் முயற்சி எடுத்து தி.மு.க. அரசால் நிறுத்தப்பட்டது.

திருப்பூர் வடக்கு தொகுதி தேர்தல் அலுவலகத்தை வேட்பாளர் ஆனந்தன் திறந்து வைத்தார்.

பி.என். ரோட்டில் போக்குவரத்து நெருக்கடியை போக்கும் வகையில் பெருமா நல்லூரில் இருந்து, புஷ்பா ரவுண்டானா வரை மேம் பாலம் அமைக்க முழு முயற்சி எடுப்பேன்.

அதேபோல், திருப்பூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை பெருமாநல்லூரில் அமைத்து, தனி தாலுகாவாக அறிவிக்க முயற்சி மேற் கொள்வேன்.

இந்த பகுதியின் மக்களின் கோரிக்கைகளை ஏற்று வருங்காலத்தில் வடக்கு தொகுதிக்கு தேவையான அனைத்து தேவைகளையும் செய்து கொடுக்க தயாராக உள்ளேன்.

இவ்வாறு பேசினார்.

அலுவலகம் திறப்பு விழாவில். விழாவில்,எம்.எல்.ஏ. விஜயகுமார், முன்னாள் எம்.எல்.ஏ. பழனிசாமி மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர். அதன்பின், வேட்பாளர் ஆனந்தன், ஈட்டி வீரம்பாளையம் ஊராட்சி பகுதியில் பிரச்சாரம் மேற்கொண்டார்.





இந்திய தேர்தல் ஆணையத்தால் புதுச்சேரி மாநிலத்திற்கு சட்டமன்ற தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு நாளை ஏப்ரல் 9 வியாழக்கிழமை வாக்குப்பதிவு நடைபெற உள்ள நிலையில் தேர்தல்துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பாக பல்வேறு ஆயத்தப் பணிகள் நடைபெற்று நாளை வாக்குப்பதிவு நடைபெறும் அனைத்து வாக்குச்சாவடிகளும் தயாராக உள்ள நிலையில் மாவட்ட தேர்தல் அதிகாரி திரு.குலோத்துங்கன் அ, இ ஆ ப அவர்கள் புதுச்சேரி எல்லைப் பகுதிகளில் அமைந்துள்ள பல்வேறு சோதனைச் சாவடிகளில் இரவு நேரங்களில் தொடர் ஆய்வு மேற்கொண்டு வருவதன் தொடர் நிகழ்வாக நேற்று செவ்வாய்க்கிழமை இரவு முள்ளோடை பகுதியில் அமைந்துள்ள சோதனைச் சாவடியினை பார்வையிட்டு அனைவரும் விழிப்புடன் பணியாற்றுமாறும் தேர்தல் நாளை நடைபெறும் நிலையில் 35 சோதனைச் சாவடிகளிலும் தீவிர கண்காணிப்பில் ஈடுபடுமாறும் அறிவுறுத்தினார்கள். மேலும் வாகன சோதனைகளை தீவிரப்படுத்தும் படியும் அங்கு பணியில் உள்ளவர்களை கேட்டுக் கொண்டார்கள். மேலும் கடைசி 72 மணி நேரத்தில் தீவிர கண்காணிப்பிற்காக கூடுதலாக 36 பறக்கும் படைகளும் 30 இரு சக்கர வாகன பறக்கும் படைகளும் பணியமர்த்தப்பட்டு தீவிரமாக கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் மாவட்ட தேர்தல் அதிகாரி அவர்கள் நேற்று இரவு பாகூர் மற்றும் குருவிநத்தம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தீவிர ஆய்வில் ஈடுபட்டார்கள். இந்த ஆய்வின் போது காவல்துறை மற்றும் தேர்தல் துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# புதுச்சேரி தேர்தல்: வாக்குச்சாவடிகளுக்கு இவிஎம் இயந்திரங்கள் அனுப்பி வைப்பு

புதுச்சேரி: ஏப்.9–

புதுச்சேரி சட்டப் பேரவைத் தேர்தல் இன்று (ஏப்.9) நடைபெறவிருக்கும் நிலையில், வாக்குப்பதிவுக்காக வாக்குச்சாவடிகளுக்கு வாக்குப்பதிவு இயந்திரங்கள் இன்று அனுப்பி வைக்கப்பட்டன.

புதுவை சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று (வியாழக்கிழமை) காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை நடக்கிறது. இதற்காக மாநிலம் முழுவதும் 30 தொகுதிகளிலும் மொத்தம் 1099 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. தேர்தலில் 34 தேசிய கட்சி வேட்பாளர்கள், 63 மாநிலக் கட்சி வேட்பாளர்கள், 80 பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத வேட்பாளர்கள், 117 சுயேச்சை வேட்பாளர்கள் என மொத்தம் 294 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.



புதுவை பிராந்திய வாக்குப்பதிவு இயந்திரங்கள் தாகூர் கலைக்கல்லூரி, மோதிலால் நேரு பாலிடெக்னிக் கல்லூரி, மகளிர் பொறியியல் கல்லூரி வளாகங்களில் வாக்கு எண்ணிக்கை மையத்தில் பாதுகாப்பு அறைகளில் வைக்கப்பட்டிருந்தது. வேட்பாளர்கள், முகவர்கள் முன்னிலையில் பாதுகாப்பு அறை சீல் இன்று புதன்கிழமை காலை திறக்கப்பட்டு, வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டு கருவிகள் பிரிக்கப்பட்டது.

இயந்திரங்கள் தொகுதி வாரியாக வாக்குச் சாவடிகளுக்கு துப்பாக்கி ஏந்திய, பலத்த போலீஸ் பாதுகாப்புடன் பிரித்து அனுப்பப்பட்டது. இயந்திரங்களை கொண்டு செல்லும் அனைத்து வாகனங்களுக்கும் ஜிபிஎஸ் வசதி ஏற்படுத்தப்பட்டிருந்தது. இயந்திரங்களுடன் வாக்குப்பதிவுக்கு தேவையான மை, எழுது பொருட்கள் உட்பட தேவையான பொருட்களும் அனுப்பி வைக்கப்பட்டன.

புதுவை மாநிலத்தில் 30 தொகுதிகளுக்கு 1099 வாக்கு இயந்திரங்கள், ஆயிரத்து 99 கட்டுப்பாட்டு கருவிகள், ஆயிரத்து 99 விவிபாட் மிஷின்கள் வாக்குப்பதிவுக்கு பயன்படுத்தப்படுகிறது. இது மட்டுமின்றி அவசர சூழ்நிலையை எதிர்கொள்ள 364 வாக்கு மிஷன், 364 கட்டுப்பாட்டு இயந்திரங்கள், 459 விவிபாட் இயந்திரங்கள் ஆகியவை கையிருப்பில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

வாக்குச்சாவடிகள் அனைத்திலும் துணை ராணுவத்தினர்,போலீஸார், தேர்தல் பணி அதிகாரிகள் பணிக்கு வந்திருந்தனர் இந்த வாக்குஇயந்திரங்கள் அந்தந்த வாக்குச்சாவடி அதிகாரி களிடம் ஒப்படைக்கப்பட்டது. அனைத்து வாக்குச்சாவடி களும் வெப் கேமரா மூலம் கட்டுப்பாட்டு அறையுடன் இணைக்கப்பட்டு, கண்காணிக்கப்படுகிறது.

இன்று காலை 7 மணிக்கு அனைத்து வாக்குச்சாவடி யிலும் வாக்குப்பதிவு தொடங்குகிறது. மாலை 6 மணிக்கு வாக்குப்பதிவு முடிகிறது. இதன்பின் வாக்குபதிவு இயந்திரங்கள், பலத்த போலீஸ் பாதுகாப்புடன் வாக்கு எண்ணும் மையங்களுக்கு கொண்டு வரப்படுகிறது. அங்கு தொகுதிவாரியாக பிரிக்கப்பட்டு இயந்திரங்கள் வைக்கப்பட்டு, பாதுகாப்பு அறை வேட்பாளர்கள், முகவர்கள் முன்னிலையில் சீல் வைக்கப்படுகிறது.

24 மணி நேரமும் பாதுகாப்பு அறை கண்காணிப்பு கேமரா மூலம் கண்காணிக்கப்படும். வீடியோவும் பதிவு செய்யப்படும். துணை ராணுவத்தினர், புதுச்சேரி போலீஸார் என மூன்று அடுக்கு பாதுகாப்பு போடப்படும். அடுத்த மாதம் 4ம் தேதி புதுவை சட்டப் பேரவை தேர்தல் வாக்குப்பதிவு எண்ணிக்கை நடக்கிறது. புதுவை மாநிலத்தில் மொத்தம் 5.03 லட்சம் பெண்கள், 4.4 லட்சம் ஆண்கள் என்று மொத்தமாக 9 லட்சத்து 50 ஆயிரத்து 311 வாக்காளர்கள் உள்ளனர்.



# புதுச்சேரி சைபர் கிரைம் போலீசில் வழக்கறிஞர் ஷாகுல் ஹமீது புகார்

புதுச்சேரி: ஏப்.9–

புதுச்சேரி நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றி வரும் S. ஷாகுல் ஹமீது, தற்போது நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலில் வில்லியனூர் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடுகிறார்.




இந்நிலையில், தனது நற்பெயருக்குக் கறை உண்டாக்கும் வகையில் திட்டமிட்டு சமூக வலைதளங்களில் அவதூறு பரப்புவோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கக் கோரி அவர் புதுச்சேரி சைபர் கிரைம் காவல் நிலையத்தில் புகார் மனு ஒன்றை அளித்துள்ளார். கடந்த 2023 ஆம் ஆண்டு, புதுச்சேரி சுல்தான் பேட்டை பகுதியை சேர்ந்த ஒரு பெண், தனது கணவர் மீது குடும்ப வன்முறைப் புகார் அளிப்பதற்காக வழக்கறிஞர் ஷாகுல் ஹமீதை அணுகியுள்ளார். அந்தப் பெண்ணின் கணவர், தனியார் நிறுவனம் ஒன்றின் சி.இ.ஓ வான செகு முகமது என்பவர் எனக் கூறப்படுகிறது. பாதிக்கப்பட்ட பெண்ணிற்காக ஷாகுல் ஹமீது நீதிமன்றத்தில் சட்டப்படி ஆஜராகி வழக்குகளைத் தொடர்ந்து நடத்தி வந்துள்ளார்.

வழக்கறிஞர் ஷாகுல் ஹமீது தனது புகாரில் குறிப்பிட்டுள்ளதாவது:

தனது தொழில்முறை கடமையைச் செய்ததற்காகவும், தற்போது தேர்தலில் அவருக்குக் கிடைத்து வரும் மக்கள் ஆதரவைப் பொறுக்க முடியாமலும், செகு முகமதுவின் தூண்டுதலின் பேரில் ஒரு கும்பல் செயல்பட்டு வருகிறது.

உபைதுர் ரஹ்மான் மற்றும் ஹாசன் மாஸ்டர் ஆகிய நபர்கள், "Sulthan Pettai News" என்ற வாட்ஸ் அப் (WhatsApp) குழுவில், ஷாகுல் ஹமீதின் தனிப்பட்ட வாழ்க்கை, கல்விச் சான்றிதழ் மற்றும் தொழில் குறித்து முற்றிலும் பொய்யான செய்திகளைப் பரப்பி வருகின்றனர்.

குறிப்பாக, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு "பெண் கடத்தல்" போன்ற கடுமையான பொய்க் குற்றச்சாட்டுகளையும் இவர்கள் பரப்பியுள்ளனர்.

வாக்காளர்கள் மத்தியில் தனது பெயரைக் கெடுக்கும் நோக்கில் செயல்படும் இந்த நபர்கள் மீது பாரதிய நியாய சன்ஹிதா (BNS) மற்றும் தகவல் தொழில்நுட்பச் சட்டம் (IT Act) பிரிவு 66ன் கீழ் வழக்குப் பதிவு செய்து, உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என ஷாகுல் ஹமீது தனது புகாரில் வலியுறுத்தியுள்ளார்.

புகார் மனுவுடன் அவதூறு பரப்பப்பட்டதற்கான வாட்ஸ்அப் ஸ்கிரீன் ஷாட்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நபர்களின் அலைபேசி எண்களையும் அவர் ஆதாரங்களாகப் போலீசாரிடம் ஒப்படைத்துள்ளார்

## பெண்கள் மத்தியில் பெருகும் ஆதரவு..

# உற்சாகத்தில் மொடக்குறிச்சி பாஜக வேட்பாளர் எஸ். கிருத்திகா சிவகுமார்..

ஈரோடு. ஏப்ரல். 09



ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில் பாஜக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் கிருத்திகா சிவக்குமாருக்கு பெண்கள் மத்தியில் ஆதரவு பெருகி வருகிறது.

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை பொதுத் தேர்தல் இந்த மாதம் 23ஆம் தேதி நடைபெற உள்ளது. அடுத்த மாதம் மே04 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

இந்த நிலையில் தமிழகத்தில் உள்ள திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியும் அதிமுக பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியும் தொகுதியின் உடன்பாடுகள் செய்து தங்களின் கட்சிகளின் வேட்பாளர்களை களத்தில் நிறுத்தி உள்ளது.

அதேபோல் சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சி, நடிகர் விஜயின் தமிழக வெற்றி கழகம் உள்ளிட்ட சில கட்சிகள் வேட்பாளர்களை அறிவித்து தேர்தல் பணி செய்து வருகிறது.

இந்த நிலையில், தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள பாஜகவுக்கு 27 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதியும் ஒன்று.

இந்தத் தொகுதியில் பாஜக வேட்பாளராக, போதிய மொடக்குறிச்சி தொகுதி பாஜக எம்எல்ஏவாக இருக்கும் டாக்டர் சி. சரஸ்வதி அவர்களின் மருமகள் எஸ்.. கிருத்திகா சிவக்குமார் போட்டியிடுகிறார்.

அதற்காக அவர் மொடக்குறிச்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். பின்னர் அவர் தொகுதி முழுவதும் தீவிர தேர்தல் பிரச்சாரம் செய்து வருகிறார்.

தொகுதியில் உள்ள பல்வேறு இடங்களில் வாக்கு சேகரிக்க செல்லும் பாஜக வேட்பாளர் எஸ். கிருத்திகா சிவகுமாரை அன்போடு வரவேற்று ஆரத்தி எடுத்து தங்களின் ஆதரவை தெரிவித்து வருகின்றனர்.

இதனால் பாஜக வேட்பாளர் எஸ். கிருத்திகா சிவகுமாருக்கு தொகுதியில் பெண்கள் மத்தியில் நல்ல வரவேற்பும் ஆதரவும் கிடைத்து வருகிறது.

பாஜக வேட்பாளர் எஸ். கிருத்திகா சிவக்குமாருக்கு ஆதரவாக பாஜக, அதிமுக, பாமக உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் தாமரை சின்னத்திற்கு வாக்கு கேட்டு தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## மாம்பழம் சின்னம் விவகாரம்:

# அவசர வழக்காக விசாரிக்க ஐகோர்ட் மறுப்பு

சென்னை: ஏப்.9–

மாம்பழம் சின்னத்தை முடக்கக் கோரிய மேல்முறையீட்டு வழக்கை அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என்ற பாமக நிறுவனர் ராமதாஸ் தரப்பு கோரிக்கையை ஏற்க சென்னை உயர் நீதிமன்றம் மறுத்துவிட்டது.

உட்கட்சி பிரச்சினை தொடர்பாக நிலுவையில் உள்ள உரிமையியல் வழக்கு முடியும் வரை மாம்பழம் சின்னத்தை முடக்கி வைக்க வேண்டும் என ராமதாஸ் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை, சென்னை உரிமையியல் நீதிமன்றம் தள்ளுபடி செய்து மார்ச் 26ம் தேதி உத்தரவிட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து ராமதாஸ் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீட்டு வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், இது சம்பந்தமாக சென்னை உயர் நீதிமன்றத்தை அணுகும்படி உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், சென்னை உயர் நீதிமன்றத்தில் பாமக நிறுவனர் ராமதாஸ் தரப்பில், மாம்பழம் சின்னத்தை முடக்கக் கோரிய வழக்கை விசாரணைக்கு எடுக்க வேண்டும் என நேற்று முறையிடப்பட்டது. அப்போது மனுவாக தாக்கல் செய்தால் விசாரிக்கப்படும் என நீதிபதிகள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில், ராமதாஸ் தரப்பில் நேற்று மீண்டும் முறையீடு செய்யப் பட்டது.

தங்கள் வழக்கை நேற்று பிற்பகல் அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப் பட்டது. இதை ஏற்க மறுத்த நீதிபதிகள், மனு எண்ணிடப்படாமல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. எண்ணிடப் பட்டால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என திட்டவட்டமாக தெரிவித்தனர்.

DCPP-109/45-1,000Cps (200)-18.2.2026

**This may be published in Newspapers and TV from the day following the last date for withdrawal of candidature and upto two days before the date of poll**

**Format C-1**

(For candidate to publish in Newpapers, TV)

## DECLARATION ABOUT CRIMINAL CASES

[As per the judgment dated 25th September, 2018 of Hon'ble Supreme Court in WP (Civil) No. 536 of 2011 (Public Interest Foundation & Ors Vs. Union of India & Anr.)]

Name and address of candidate : R. SOUPRAMANIA NE

Name of Political Party : PATTALI MAK KAL KATCHI

(Independent candidates should write "Independent here)

Name of Election : General Election to the Legislative Assembly, Puducherry 2026

Name of Constituency: 7- KADIRGAMAM

I. **R. SOUPRAMANIANE** (name of candidate), a candidate for the above mentioned election, declare for public information the following details about my criminal antecedents

(A) Pending criminal cases

| SI. No | Name of Court | Case No. and dated | Status of case(s) | Section(s) of Acts concerned and brief description of offence(s) |
|---|---|---|---|---|
| 1. | CR.NO. 183/2019 | W/S 341,427 IPC.r/w34 IPC | pending. | D. nagar polie Stadion -Land Dispurte |
| 2. | CR.NO. 174/2025 | W/S.189(2),329 (3) 305 (a)324(s) 296(b), 351 (2) r/w 190 BNS | Pending | D. nagar polie Stadion -Land Dispurte |
| 3. | I.R.NO.58/8085 | W/S.126 0f BNS | Perding | Taluk office, Land Disgure |
| 4. | CR-NO-23/2026 | W/S. 189 (2)126 (2) 296 (b) 351(2) | | BNS R/W 190 BNS D. nagar polie Stadion -Land Dispurte |

(B) Details about cases of conviction for criminal offences

| SI. No | Name of Court & date(s) of order(s) | Description of offence(s) & punishment imposed | Maximum Punishment Imposed |
|---|---|---|---|
| 1. | NIL | NIL | NIL |
| 2. | NIL | NIL | NIL |
| 3. | NIL | NIL | NIL |
| 4. | NIL | NIL | NIL |

*In the case of election to Council of States or election to Legislative Council by MLAs, mention the election concerned in place of name of constituency

**Note: 1. The particulars regarding criminal cases pending against the candidate shall be in bold letters.**

2. The matter in newspapers shall be published in font size of at least 12.

3 Details should be given separately for each case in separate rows

4. If a candidate is contesting an election on the ticket of a particular party, he/she is required to inform the party about the criminal cases pending against him/her.

5. The candidate shall report about publishing of declaration regarding criminal cases immediately after such publication to the Returning Officer. In addition, he shall submit a report about publishing of the declaration regarding cases in Format C-4 alongwith the account of election expenses within 30 days of declaration of result of election. (a) In Gang of elections to the Lok Sabha and the Lagislative Assemblies, this shall be submitted

# அதிமுகவின் எஃகு கோட்டை 'சேலம்' தொகுதிகளின் நிலவரம் என்ன?

சேலம். ஏப். 9–

சேலம் மாவட்டம் நீதிக்கட்சி,திராவிடர் கழகம்,மூன்று முதல்வர்கள்,மாடர்ன் தியேட்டர்ஸ் என அரசியல்கலாசார வரலாற்றில் தனித்த இடம் பெற்றது.

11 தொகுதிகளில் எடப்பாடி, ஓமலூர், சங்ககிரி, ஏற்காடு உள்ளிட்ட பகுதிகளில் அதிமுக நீண்டகால ஆதிக்கம் செலுத்துகிறது. வன்னியர், பட்டியலின, பழங்குடியினர், சிறுபான்மையினர் வாக்குச்சூழலை யார் கையாள்கிறார்களோ அவர்களுக்கே அடுத்த தேர்தலில் முன்னிலை வாய்ப்பு அதிகம் என மதிப்பிடப்படுகிறது.

நீதிக்கட்சி திராவிடர் கழகமாக உருவெடுத்ததும், புகழ்பெற்ற 'மாடர்ன் தியேட்டர்ஸ்' இயங்கியதும் இந்த மண்ணில்தான். சுப்பராயன், ராஜாஜி, எடப்பாடி பழனிசாமி என மூன்று முதல்வர்களை தந்த பெருமையும் உண்டு. மாங்கனி, வெள்ளிக்கொலுசு, இளம்பிள்ளை சேலைகள் எனப் புவிசார் அடையாளங்களுடன், மேட்டூர் அணை மற்றும் ஏற்காடு போன்ற சுற்றுலாத் தலங்களும் இங்குப் பிரபலம். சென்னைக்கு அடுத்தபடியாக அதிக தொகுதிகளை கெண்டுள்ளது சேலம். 3 தனித்தொகுதிகள் உட்பட 11தொகுதிகள் சேலம் மாவட்டத்தில் உள்ளன.

எடப்பாடி தொகுதி: முன்னாள் முதல்வர் பழனிசாமியின் சொந்தத் தொகுதி என்பதையும் தாண்டி, கடந்த ஐந்து தேர்தல்களில் நான்கு முறை அதிமுகவை வெற்றிபெறச் செய்து அக்கட்சியின் இதயத்துடிப்பாகத் திகழ்கிறது எடப்பாடி . அதேபோல், மாவட்டத்திலேயே அதிகபட்சமாக 2.91 லட்சம் வாக்காளர்களைக் கொண்ட ஓமலூர் தொகுதியில் அதிமுக 8 முறை வெற்றி பெற்று தனது பலத்தை நிரூபித்துள்ளது.

மலைப்பிரதேசமான ஏற்காடு தொகுதியிலும், கடந்த ஐந்து தேர்தல்களில் நான்கு முறை அதிமுகவே வெற்றி வாகை சூடியுள்ளது.

ஆத்தூர் தொகுதி: தனித்தொகுதியான ஆத்தூரில் ஒரு காலத்தில் காங்கிரஸ் மற்றும் அதிமுக இடையே சமபலப் போட்டி நிலவியது. ஆனால், கடந்த ஐந்து தேர்தல்களில் நான்கு முறை அதிமுக வெற்றி பெற்று அத்தொகுதியைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளது.

கெங்கவல்லி தொகுதி: புதிதாக உருவாக்கப்பட்ட தனித்தொகுதியான கெங்கவல்லி தொகுதியிலும் அதிமுக இரண்டு முறை வென்றுள்ளது. தொழிலாளர்கள் அதிகம் நிறைந்த மேட்டூர் தொகுதியில் மட்டும் அதிமுக, பாமக மற்றும் தேமுதிக ஆகிய கட்சிகளிடையே வெற்றி வாய்ப்புகள் மாறி மாறிப் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளன. கடந்த ஐந்து தேர்தல்களில் அதிமுகவும் பாமகவும் தலா இரண்டு முறை இங்கு வெற்றி பெற்றுள்ளன.

சங்ககிரி தொகுதி: சங்ககிரி தொகுதியைப் பொறுத்தவரை, அதிமுக 8 முறை வென்று தனது கோட்டையாக மாற்றியுள்ளது. மாநகரப் பகுதிகளான சேலம் மேற்கு மற்றும் சேலம் தெற்கு தொகுதிகளிலும் அதிமுகவின் ஆதிக்கமே மேலோங்கி நிற்கிறது. குறிப்பாக, சேலம் தெற்கு தொகுதியில் உருவானது முதல் அதிமுகவே தொடர் வெற்றிகளைப் பெற்று வருகிறது.

சேலம் வடக்கு தொகுதி: சேலம் வடக்கு தொகுதி மட்டும் திமுகவின் நம்பிக்கையாக விளங்குகிறது; இங்கு கடந்த மூன்று தேர்தல்களில் இரண்டு முறை திமுக வெற்றி பெற்றுள்ளது.

வீரபாண்டி தொகுதி: வரலாற்று ரீதியாகப் புகழ்பெற்ற வீரபாண்டி தொகுதியில் அதிமுக மற்றும் திமுக இடையே கடும் போட்டி நிலவி வந்தாலும், கடந்த ஐந்து தேர்தல்களில் இரண்டு முறை அதிமுகவும் இரண்டு முறை திமுகவும் வென்று சமபலத்துடன் உள்ளன.

சேலம் மாவட்டத்தின் 11 தொகுதிகளில் அதிமுகவின் ஆதிக்கம் தொடரும் நிலையில், அதன் பின்னணியில் உள்ள சமூகக் காரணிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. எடப்பாடி, ஓமலூர், மேட்டூர் உள்ளிட்ட 5 தொகுதிகளில் வன்னியர் சமுதாய வாக்குகள் வெற்றியைத் தீர்மானிக்கின்றன. அதேவேளை, ஏற்காடு, ஆத்தூர், கெங்கவல்லி ஆகிய தனித் தொகுதிகளில் பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களின் வாக்குகள் பிரதானமாக உள்ளன.

மாநகரப் பகுதிகளான சேலம் தெற்கு மற்றும் வடக்கில் சிறுபான்மையினர் உள்ளிட்ட பலதரப்பட்ட சமூகத்தினர் வெற்றியைத் தீர்மானிக்கின்றனர். இந்தச் சமூகக் கட்டமைப்பைச் சரியாகக் கையாளும் கட்சிகளுக்கே வரும் தேர்தலிலும் வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில், சேலம் மாவட்டம் அதிமுகவின் எஃகு கோட்டையாகத் திகழ்வதும், அதனைத் தகர்க்க திமுக கடுமையான போராட்டத்தை முன்னெடுப்பதும் கள யதார்த்தமாக உள்ளது.

# தேமுதிகவில் இருந்து விலகுவதாக மீசை ராஜேந்திரன் அறிவிப்பு!

சென்னை: ஏப்.9

தேமுதிகவில் இருந்து விலகுவதாக மீசை ராஜேந்திரன் அறிவித்துள்ளார். தேமுதிகவில் முக்கிய நிர்வாகிகளில் ஒருவராகவும், விஜயகாந்தின் தீவிர ஆதரவாளருமாக இருந்த மீசை ராஜேந்திரன் அக்கட்சியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். கடந்த மூன்று சட்டசபை தேர்தல்களிலும் போட்டியிட்ட மீசை ராஜேந்திரனுக்கு இந்த தேர்தலில் போட்டியிட வாய்ப்பு மறுக்கப்பட்டதால் அவர் இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மீசை ராஜேந்திரன் கட்சியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். இது தொடர்பாக தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதாவிற்கு கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளார். கட்சியில் இருந்து தன்னை விடுவிக்குமாறு அந்த கடிதத்தில் கோரியுள்ளார். கேப்டன் மன்றத்தில் 31 ஆண்டுகளும், தேமுதிகவில் 21 ஆண்டுகளும் உழைத்திருக்கிறேன் என்று கூறியுள்ளார்.




ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு மாநகராட்சி அலுவலக வளாகத்தில் 100 சதவீதம் வாக்குப்பதிவு குறித்த விழிப்புணர்வு வாசகம் அச்சிடப்பட்ட இராட்சச பலூனை வானில் பறக்கவிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினார் உடன் ஈரோடு மாநகராட்சிஆணையாளர்/ ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் அர்பித்ஜெயின் உட்பட பலர் உள்ளனர்.



மணப்பாறை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவ மாணவர்களுக்கு மணப்பாறை வட்டார தோட்டக்கலை மற்றும் மலை பயிர்கள் துறை சார்பில் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது. இதில் கல்லூரியின் முதல்வர், பேராசிரியர்கள்,உதவி பேராசிரியர்கள், தோட்டக்கலை உதவி இயக்குநர், தோட்டக்கலை அலுவலர், உதவி தோட்டக்கலை அலுவலர்கள் அனைவரும் கலந்து கொண்டு நுறு சதவீதம் வாக்களிப்போம் என அனைவராலும் விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.



விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைந்துள்ள தேர்தல் கணினி அறையில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 முன்னிட்டு விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 07 சட்டமன்ற தொகுதிகளில் தேர்தல் பணி மேற்கொள்ள உள்ள வாக்குச்சாவடி தலைலமை அலுவலர்கள் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்கள் ஆகியோருக்கு இரண்டாம் கட்ட தற்செயல் தெரிவு முறையில் தேர்வு செய்தல் பணி மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரஹ்மான், தலைமையில் தேர்தல் பொதுப்பார்வையாளர்கள் ஷாலினி பண்டிட், பாவ்சாஹேப் தாங்கடே, மற்றும் ஓம் பிரகாஷ் வர்மா, ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் அரிதாஸ் உட்பட பலர் உள்ளனர்.

# திருவள்ளூர் தொகுதி வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரனை ஆதரித்து கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்



திருவள்ளூர் ஏப் 09 :

திருவள்ளூர் தொகுதி வேட்பாளர் வி.ஜி. ராஜேந்திரனை ஆதரித்து திருவள்ளூர் மருத்துவக் கல்லூரி அருகே கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம் செய்ய வருகை தந்தார். அவருக்கு திருவள்ளூர் தொகுதி மக்கள் சார்பாக உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது பேசிய அவர், சென்ற முறை நடந்த தேர்தலில் வி,ஜி. ராஜேந்திரன் 22 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்த நீங்கள் இந்த முறை ஐம்பதாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும். வி,ஜி.ராஜேந்திரன் தொகுதி மக்களுக்கு என்ன தேவையோ அதை முதலமைச்சரிடம் சண்டை போட்டு பெற்றுத் தருவதில் சிறந்தவர் என்று பேசினார்.

மேலும் கடந்த 5 ஆண்டுகால திமுக ஆட்சியில் திருவள்ளூர் தொகுதியில் பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தியிருக்கிறோம். அதன்படி மப்பேட்டில் 1200 கோடி மதிப்பீட்டில் துறைமுகம். 308 கோடி ரூபாய் செலவில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை. திருவள்ளூர் நகராட்சியில் இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய நூலகம் கட்டி முடிக்கப் பட்டுள்ளது. நகராட்சியில் உள்ள அனைத்து சாலைகளும் சீரமைக்கப்பட்டுள்ளது. தெருவிளக்குகளும் போடப்பட்டுள்ளது.

அதே போல் திருப்பாச்சூரில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நான்கு குடிநீர் நீர்த்தேக்க தொட்டிகள் கட்டப்பட்டுள்ளது 37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. ரூ.30 கோடி மதிப்பீட்டில் புறவழிச்சாலை கொண்டு வரப்பட்டுள்ளது. சுங்குவார்சத்திரம் முதல் மப்பேடு வரை நான்கு வழி சாலை போடப்பட்டுள்ளது. மணவாள நகர், திருவாலங்காடு, திருவள்ளூர் டோல்கேட் பகுதிகளில் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நான்கு வழி சாலை அமைக்கப்பட்டுள்ளது.

13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிட்கோ தொழிற்பேட்டை உருவாக்கப்பட்டுள்ளது . அதேபோல் திருவள்ளூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளிகளில் கூடுதல் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. பெரியகுப்பம் முதல் வரதராஜர் நகர் வரை சாலை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. பேரம்பாக்கம், வெங்கத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் புதிய நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளது. மாவட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபாதை வசதி அமைக்கப்பட்டுள்ளது.

100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவள்ளூர் தொகுதி முழுவதும் ஆறு புதிய மேம்பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அதேபோல் தடுப்பணையும் மேலும் கட்டி முடிக்கப் பட்டுள்ளது. திருவள்ளூர் தொகுதியில் குறைந்தது 50 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வி.ஜி.ராஜேந்திரனை வெற்றி பெற செய்தால் நீங்கள் விடுத்த அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றித் தருவதற்கு முதலமைச்சரிடம் எடுத்து சொல்லி உடனடியாக நிறைவேற்றுவேன் எனவும் உறுதியளித்தார்.

கடந்த ஐந்தாண்டு காலத்தில் திமுக கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறோம். குட்கா வியாபாரிகளிடம் வசூல் செய்து அதனை விற்பனை செய்தவர் தான் முன்னாள் அமைச்சர் பி வி ரமணா அவர்தான் அதிமுக சார்பில் தற்போது போட்டியிடுகிறார். இந்த சட்டமன்ற தேர்தல் டெல்லி அணியா தமிழ்நாடு அணியா என மோதிப் பார்ப்போம் என தெரிவித்துள்ளார். ஜெயிக்கப் போவது நமது தமிழ்நாடு அணி தான். திமுக அரசின் திட்டங்களை அக்கம் பக்கத்தில் இருப்பவரிடம் எடுத்து சொல்லி திமுகவுக்கு வாக்களிக்க செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார். மீண்டும் 2.0 ஆட்சி அமைய வி.ஜி ராஜேந்திரனை 50000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

# இந்திய ராணுவத்தில் அக்னிவீர் திட்டத்தின் கீழ் பணியிடங்களுக்கு 10ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் :

## மாவட்ட ஆட்சியர் தகவல்

திருவள்ளூர் ஏப் 09 :

இந்திய இராணுவத்தில் அக்னிவீர் திட்டத்தின் கீழ் திருமணமாகாத (ஆண்கள் மற்றும் பெண்கள்) மற்றும் மண்டல மத்திய பிரிவினருக்கு 2027ஆம் ஆண்டிற்கான Agniveer General Duty, Agniveer Technical, Agniveer Clerk / Store Keeper, Technical, Agniveer Tradesmen (10th and 8th Pass), Agniveer Women Military Police, Soldier NA/ NA_VET, Sepoy Pharma ஆகிய பணியிடங் களுக்கு ஆட்சேர்ப்பிற்கான அறிவிப்பு www.joinindianarmy.nic.in வலைதளத்தில் 13.02.2026 அன்று வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் www.joinindianarmy.nic.in என்ற இணையதளத்தில் ஆன்லைனில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். இதற்கான பதிவு 13.02.2026 முதல் தொடங்கி 01.04.2026 அன்று முடிவடையும். அக்னிவீர் தேர்வர்கள் தங்கள் தகுதியின் அடிப்படையில் ஏதேனும் இரண்டு பிரிவுகளுக்கு விண்ணப்பிக்கலாம். சிணிணி தேர்வு தமிழ் உட்பட 13 மொழிகளில் நடத்தப்படும் மற்றும் ITI/Diploma மற்றும் ழிசிசி தகுதி பெற்றவர்களுக்கு போனஸ் மதிப்பெண்கள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, 2027 ஆம் ஆண்டிற்கான மேற்படி இந்திய இராணுவ ஆட்சேர்ப்பு செய்யப்படும் பணியிடங்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்களை என்னென்னவென்று முறையாக அறிந்து அதற்கு ஏற்றார் போல் வருகின்ற 01.04.2026க்குள் www.joinindianarmy.nic.in என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் என்று அறிவித்த நிலையில். தற்போது விண்ணப்பிக்கும் கடைசி தேதியானது 10.04.2026 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி குறிப்பிடப்பட்ட இணையதளத்தில் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்குமாறு திருவள்ளூர் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

# கோவை மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் வேட்பு மனு ஏற்கப்பட்டதால் பொதுமக்கள் மகிழ்ச்சி



கோவை ஏப்:09

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதி சுயேட்சை வேட்பாளர் மக்கள் சேவகர் டி ஆர் சண்முகசுந்தரம் சுயேட்சையாக வேட்பு மனு தாக்கல் செய்திருந்த நிலையில் வேட்பு மனு ஏற்கப்பட்டதால் ஆதரவாளர்கள் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில் இந்தத் தொகுதியில் மக்களின் தேவைகளை நன்கு அறிந்தவன் என்னுடைய பணிகளை கடந்த 30 ஆண்டுகளாக அறிந்து தெரிந்து 2026 இல் நான்தான் இங்கே சட்டமன்ற உறுப்பினராக வரவேண்டும் என்று பெரும் ஆதரவோடு மக்கள் இருந்தனர். இந்த நிலையில் ஏதோ ஒரு காரணத்தினால் எனக்கு சீட்டு கிடைக்க வில்லை ஆதலால் திமுகவிலிருந்து ராஜினாமா செய்து விட்டு சுயேட்சை வேட்பாளராக மக்கள் சேவையில் பணியாற்ற தொடங்குகிறேன். இதனால் இப்பகுதி மக்கள் 2026 சட்டமன்ற தேர்தலில் என்னை மாபெரும் வெற்றி அடைய செய்வார்கள் என்று தெரிவித்தார்.

# 'வீட்டு உபயோக காஸ் சிலிண்டர் முன்பதிவு செய்து 10 நாட்கள் ஆகியும் கிடைக்கவில்லை!'

சென்னை: ஏப்.9–

வீட்டு உபயோகத்துகான காஸ் சிலிண்டர் முன்பதிவு செய்து 10 நாட்கள் ஆகியும், நுகர்வோருக்கு டெலிவரி செய்யாமல் ஏஜென்சிகள் தாமதம் செய்வதாக பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஈரான் மீதான அமெரிக்கா இஸ்ரேல் போரினால், இந்தியா உட்பட பல்வேறு நாடுகளில் எரிபொருள் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் தற்போது எல்பிஜி காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வீட்டு உபயோக சிலிண்டர் விநியோகிக்கப்படும் நிலையில், வணிக பயன்பாட்டு சிலிண்டர் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், பெரும்பாலான ஓட்டல்கள் மூடப்பட்டுள்ளன.

இதற்கிடையில், சிலிண்டர் முன்பதிவு கால இடைவெளியை நகர்புறங்களில் 21 நாட்களில் இருந்து 25 நாட்களும், கிராமப்புறங்களுக்கு 45 நாட்கள் இடைவெளி என மத்திய அரசு அறிவித்தது. சமையல் காஸ் சிலிண்டர் போதுமான அளவு கையில் இருப்பதாகவும், தட்டுப்பாடு இன்றி காஸ் சிலிண்டர் விநியோகிக்கப் படுவதாக அறிவிக்கப்பட்டாலும், சென்னையில் சில இடங்களில் உள்ள காஸ் ஏஜென்சி அலுவலங்களின் முன்பு காலி சிலிண்டர்களுடன் பொதுமக்கள் நிற்கின்றனர்.

வில்லிவாக்கம், வடபழனி உள்பட பல இடங்களில் காஸ் ஏஜென்சி அலுவலகங்களில் வாடிக்கையாளர்கள் குவிந்து வருகின்றனர். முன்பதிவு செய்ததற்கான



குறுந்தகவல் செல்போன்களுக்கு வந்து 10 நாட்கள் ஆகியும், சிலிண்டர் விநியோகம் செய்ய வில்லை என அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

பொதுவாக காஸ் சிலிண்டர் முன்பதிவு செய்து டெலிவரிக்கான அங்கீகார குறியீடு (டிஏசி) எண் ஒதுக்கீடு செய்த பின்னர் குறிப்பிட்ட நாட்களுக்குள் காஸ் சிலிண்டர் விநியோகம் செய்யப்பட வேண்டும். ஆனால், பலருக்கு டிஏசி எண் ஒதுக்கப்பட்டு பல நாட்கள் ஆகியும் சிலிண்டர் டெலிவரி செய்யப்படவில்லை.

இது குறித்து, சென்னையை சேர்ந்த வாடிக்கையாளர்கள் கூறியதாவது: நகர்புறங்களில் 25 நாட்களுக்கு பிறகு, காஸ் சிலிண்டர் முன்பதிவு செய்ய கட்டுப்பாடுகளை கொண்டு வந்துள்ளனர். இதன்படி, முறையாக முன்பதிவு செய்து, 10 நாட்களை கடந்துவிட்டது. இதுவரை டிஏசி எண் வரவில்லை. இதன் பிறகு, எப்போது டெலிவரி செய்வார்கள் என்பதே தெரியவில்லை.

இதுதவிர, டிஏசி எண் வந்த வாடிக்கையாளர்களுக்கு எப்போது விநியோகம் செய்வார்கள் எனவும் தெரியவில்லை. ஏஜென்சியில் கேட்டால், உங்களுக்கு சிலிண்டர் ஒதுக்கிவிட்டோம். டெலிவரி செய்பவர்களிடம் கேளுங்கள் என்று கூறுகின்றனர். டெலிவரி செய்பவர்களிடம் கேட்டால் சிலிண்டர் வரவில்லை என்கின்றனர்.

சம்பந்தப்பட்ட ஏஜென்சிகளுக்கு போன் போட்டாலும் எடுப்பதில்லை. நேரில் சென்று முறையிட்டாலும், சரியாக பதில் கூறுவது இல்லை. வீட்டு உபயோக சிலிண்டர்களை வாடிக்கையாளர்களுக்கு கொடுக்காமல் ஓட்டல்களில் அதிக விலைக்கு விற்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

இது குறித்து, இந்தியன் ஆயில் நிறுவன அதிகாரி ஒருவர் கூறுகையில், "சென்னையில் மக்கள் தொகை அதிகமாக உள்ளதால், சிலிண்டர் இணைப்புகளும் அதிகமாக உள்ளது. இப்பகுதிகளில், பதற்றத்தில் சிலிண்டர் அதிக அளவு முன்பதிவு நடைபெறுவதால், ஏஜென்சியால் சமாளிக்க முடியாத நிலை உள்ளது.


ஆயிரம் சிலிண்டர் விநியோகம் செய்யக்கூடிய ஒரு ஏஜென்சியால், 5 ஆயிரம் காஸ் சிலிண்டர்கள் வரை பதிவு செய்து, காத்திருக்கும் நிலை இருக்கிறது. இருப்பினும், முன்பதிவு செய்த தேதி அடிப்படையில் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. சிலிண்டர் கிடைப்பதிலோ, விநியோகிப்பதிலோ பிரச்சினை இல்லை" என்றார்.

# சைக்கிளில் 14 நாட்களில் எவரெஸ்ட் அடிவாரம் சென்ற முதல் இந்திய பெண்

லக்னோ: உத்தரபிரதேச மாநிலம் கோரக்பூரை சேர்ந்த ஆசிரியை திவ்யா சிங் (28), சைக்கிளில் எவரெஸ்ட் அடிவார முகாம் (பேஸ் கேம்ப்) சென்றடைந்த முதல் இந்தியப் பெண் மற்றும் உலகின் 2வது பெண் என்ற சாதனையை படைத்துள்ளார்.

நேபாள தலைநகர் காத்மாண்டுவில் தனது பயணத்தை தொடங்கிய அவர், 14 நாட்கள் கடினமான பயணத்துக்கு பிறகு 17,560 அடி உயரத்தில் உள்ள அடிவார முகாமை வெற்றிகரமாக சென்றடைந்தார். இந்தப் பயணத்தின்போது, அவர் மைனஸ் 12 டிகிரி வரையிலான கடும் குளிர், குறைவான ஆக்சிஜன் மற்றும் அதிவேகக் காற்றை எதிர்கொண்டுள்ளார். திவ்யா தினமும் 10 முதல் 12 மணிநேரம் செங்குத்தான மற்றும் கரடுமுரடான மலைப் பாதைகளில் சைக்கிள் ஓட்டியுள்ளார்.

சைக்கிள் செல்ல முடியாத இடங்களில், அதை தோளில் சுமந்து கொண்டு முன்னேறினார். அடிவார முகாமை அடைய சலேரி, சுர்கே, பக்டிங், நம்ச்சே பஜார், லோபுச்சே, கோரக் ஷெப் ஆகிய சவாலான இடங்களை அவர் கடந்துள்ளார். அடிவார முகாமை திவ்யா சென்றடைந்த தருணத்தை உமா சிங் என்பவர் இன்ஸ்டாகிராமில் பகிர்ந்துள்ளார்.




அந்த வீடியோவில் திவ்யா, மலைகளின் பின்னணியில் தனது சைக்கிளுக்கு அருகில் தேசியக்கொடி ஏந்தியவாறு காணப்படுகிறார். இந்த வீடியோவுக்கான விளக்கத்தில், "வாழ்த்துக்கள் திவ்யா சிங்; சைக்கிளில் எவரெஸ்ட் அடிவார முகாம் சென்றடைந்த இந்தியாவின் முதல் பெண்மணி நீங்கள்தான். இது நமது கோரக்பூர், உ.பி. மற்றும் இந்தியாவுக்கு ஒரு பெருமையான தருணம்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

திவ்யாவுக்கு சமூக ஊடகங்களில் பலரும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர். இது குறித்து ஒருவர் தனது பதிவில், "இதனால்தான் கண்களில் உறுதியுடன் இருக்கும் பெண்களை எனக்குப் பிடிக்கிறது. இதுபோன்று தொடர்ந்து வளர்ந்து வரலாறு படைத்திடுங்கள்" என்று கூறியுள்ளார்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421